


# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

### மானியக் கோரிக்கை எண். 3

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

### மானியக் கோரிக்கை எண். 24

அறிவிப்புகள்

2022-2023

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 3

# சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

## மானியக் கோரிக்கை எண். 24

அறிவிப்புகள்

2022-2023

எஸ். ரகுபதி

சட்டத்துறை அமைச்சர்

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

### நீதி நிருவாகம்

### அறிவிப்புகள்

**1. கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சியில் ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District and Sessions Court at Kallakurichi in Kallakurichi District.**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைக்கப்படும்.

2. **தென்காசி மாவட்டம் தென்காசியில் ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District and Session Court at Tenkasi in Tenkasi District.**

தென்காசி மாவட்டம் தென்காசியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைக்கப்படும்.



3. **இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டையில் ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District and Sessions Court at Ranipet in Ranipet District.**

இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டையில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைக்கப்படும்.

4. **நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட நீதிமன்றம் மற்றும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை பிரித்து தனியாக ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

Constitution of a separate Chief Judicial Magistrate Court by bifurcating the existing District Court-cum-Chief Judicial Magistrate Court, Udhagamandalam in the Nilgiris District.

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட நீதிமன்றம் மற்றும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை பிரித்து தனியாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.



5. **தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.**

Constitution of a Sub Court at Bodinayakanur in Theni District.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

6. திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of a Sub Court at Vandavasi in Tiruvannamalai District.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.



7. திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of a Sub Court at Musiri in Tiruchirappalli District.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

8. **நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் ஒருசார்புநீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a Sub Court at Sirkali in Nagapattinam District.**

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.



9. **தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் ஒருசார்புநீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a Sub Court at Srivaikuntam in Thoothukudi District.**

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

**10. ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a Sub Court at Kodumudi in Erode District.**

ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.



**11. விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a Sub Court at Sankarapuram in Villupuram District.**

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

**12. வேலூர் மாவட்டம் அணைக்கட்டில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at Anaicut in Vellore District.**

வேலூர் மாவட்டம் அணைக்கட்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.



**13. ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at Modakurichi in Erode District.**

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

**14. புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum Judicial Magistrate Court at Viralimalai in Pudukkottai District.**

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.



**15. திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at Kilpennathur in Tiruvannamalai District.**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

16. விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of a District Munsif-cum Judicial Magistrate Court at Watrap in Virudhunagar District.

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.



17. கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன்மலையில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at Kalvarayan Hills in Kallakurichi District.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன்மலையில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

**18. காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at Kundrathur in Kancheepuram District.**

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.



**19. வேலூர் மாவட்டம் கே.வி. குப்பத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at K.V. Kuppam in Vellore District.**

வேலூர் மாவட்டம் கே.வி. குப்பத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

20. **செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a District Munsif-cum-Judicial Magistrate Court at Vandalur in Chengalpattu District.**

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.



21. **சென்னை பெருநகர காவல் துறையின் மத்திய குற்றப் பிரிவால் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய ஒரு கூடுதல் நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of one Additional Court exclusively to conduct trial of cases registered and investigated by the Central Crime Branch of Greater Chennai Police.**

சென்னை பெருநகர காவல் துறையின் மத்திய குற்றப் பிரிவால் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய ஒரு கூடுதல் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

**22. மரணமடைந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு நலநிதி வழங்குவதற்காக, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதிக்கு தற்போது அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் மானியத்தை ரூ.8.00 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாக உயர்த்தி வழங்குதல்.**

**Enhancement of the annual grant provided to the Tamil Nadu Advocate Welfare Fund by the Government for grant of financial assistance to the legal heirs / nominees of the deceased advocates from Rs.8.00 crore to Rs.10.00 crore.**

மரணமடைந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு நலநிதி வழங்குவதற்காக, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதிக்கு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் மானியத்தை ரூ.8.00 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.



## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

### அறிவிப்புகள்

**1. அனைத்து சிறைகள், சிறைத்துறை துணைத் தலைவர் மற்றும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் அலுவலகங்களை நவீனமயமாக்குதல்.**

**Modernization of all prisons, office of the Range Deputy Inspector General of Prisons and Chief Probation Superintendent's Office.**

அனைத்து சிறைகள், சிறைத்துறை துணைத் தலைவர் மற்றும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் அலுவலகங்களுக்கு 63 கணினிகள், 45 புள்ளி அணி அச்சு இயந்திரங்கள் (Dot Matrix Printers), 18 லேசர் அச்சு இயந்திரங்கள் (Laser Printers) மற்றும் 21 நகலெடுக்கும் இயந்திரங்கள் (Xerox Machines) ரூ.82.92 இலட்சம் தொடரா செலவினத்தில் புதியதாக கொள்முதல் செய்து நவீனமயமாக்கப்படும்.

2. **அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள பழைய EPBAX இயந்திரங்களுக்கு பதிலாக, 13 EPBAX இயந்திரங்களும் மற்றும் தலைமையிடத்து அலுவலகம், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள பழைய படிப் பெருக்கி இயந்திரங்களுக்கு பதிலாக, 11 படிப் பெருக்கி (Digital Duplicator) இயந்திரங்களும் புதியதாக கொள்முதல் செய்தல்.**

Purchase of 13 new EPBAX Boxes replacing the old EPBAX Boxes used in all Central Prisons, Special Prisons for Women, Puzhal, Vellore, Trichy and District Jail & Borstal School, Pudukkottai and purchase of 11 new Digital Duplicator machines replacing the old Digital Duplicator machines used in all Central Prisons and District Jail & Borstal School, Pudukkottai.



அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தற்போது பயன்பாட்டில் உள்ள பழைய EPBAX இயந்திரங்களுக்கு பதிலாக, 13 EPBAX இயந்திரங்களும் மற்றும் தலைமையிடத்து அலுவலகம், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தற்போது பயன்பாட்டில் உள்ள பழைய படிப் பெருக்கி (Digital Duplicator) இயந்திரங்களுக்கு பதிலாக, 11 படிப் பெருக்கி இயந்திரங்களும் ரூ.124.75 இலட்சம் தொடரா செலவினத்தில் புதியதாக கொள்முதல் செய்யப்படும்.

3. 24 மனநல ஆலோசகர்களுக்கு (Counsellors), தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.15,000/- மதிப்பூதியத்தை, ரூ.25,000/- ஆக, உயர்த்தி வழங்குதல்.

Enhancement of Honorarium paid to the 24 Counsellors working in all Central Prisons, Special Prisons for Women and District Jail and Borstal School, Pudukkottai from Rs.15,000/- to Rs.25,000/- per month.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் பணிபுரியும், 24 மனநல ஆலோசகர்களுக்கு (Counsellors), தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.15,000/- மதிப்பூதியத்தை, ரூ.25,000/- ஆக, ஆண்டுக்கு ரூ.28.80 இலட்சம் தொடர் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.



4. சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவிற்காக செலவிடப்படும் தற்போதைய தொகையான ரூ.50/-யை ரூ.100/-ஆக உயர்த்திவழங்குதல்.

Enhancement of expenditure for providing special diet to the prisoners on the occasion of Pongal festival, Republic day, Independence day and Gandhi Jeyanthi fr**om Rs.50/- to Rs.100/-**

பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம் மற்றும் காந்தி பிறந்த தினம் ஆகிய நாட்களில் சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவிற்காக, செலவிடப்படும் தற்போதைய தொகையான ரூ.50/-யை ரூ.100/ஆக, ஆண்டுக்கு ரூ.39 இலட்சம் தொடர் செலவினத்தில், உயர்த்தி வழங்கப்படும்.

5. 12 சமூக இயல் வல்லுநர்களை (Social Case Work Experts), மாதம் ரூ.15,000/- மதிப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்தல்.

Engagement of 12 Social Case Work Experts in all Central Prisons (except Vellore, Coimbatore and Madurai), Special Prisons for Women and District Jail & Borstal School, Pudukkottai on honorarium basis.

அனைத்து மத்திய சிறைகள் (வேலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை தவிர), மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் 12 சமூக இயல் வல்லுநர்களை (Social Case Work Experts), மாதம் ரூ.15,000/- மதிப்பூதிய அடிப்படையில், ஆண்டுக்கு ரூ.21.60 இலட்சம் தொடர் செலவினத்தில், நியமனம் செய்யப்படும்.



6. திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் பெண்கள் தனிச்சிறைகளில் தலா ஒரு நல அலுவலர் (Welfare Officer) பணியிடத்தினை, புதியதாகத் தோற்றுவித்தல்.

Creation of new posts of Welfare Officer for each of the Special Prisons for Women at Trichy, Madurai and Coimbatore.

திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் பெண்கள் தனிச்சிறைகளில் தலா ஒரு நல அலுவலர் (Welfare Officer) பணியிடத்தினை, ஆண்டுக்கு ரூ.35.22 இலட்சம் தொடர் செலவினத்தில், புதியதாகத் தோற்றுவிக்கப்படும்.

**7. ஆத்தூர், செங்கல்பட்டு, கோபிச் செட்டிப்பாளையம் மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு, 100 KVA திறன் கொண்ட 4 மின்னாக்கிகள் (Generators), கொள்முதல் செய்தல்.**

**Purchase of 4 Generators with a capacity of 100 KVA for District Jail, Chengalpet, Attur, Gobichettypalayam and District Jail & Borstal School Pudukkottai.**

ஆத்தூர், செங்கல்பட்டு, கோபிச் செட்டிப்பாளையம் மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு, 100 K V A திறன் கொண்ட 4 மின்னாக்கிகள் (Generators), ரூ. 60 இலட்சம் தொடரா செலவினத்தில், கொள்முதல் செய்யப்படும்.



**8. அனைத்து வகையான சிறைவாசிகளையும் நல்வழிப்படுத்தி மறுவாழ்வு அளிக்க "சீர்திருத்தச் சிறகுகள்" என்கிற புதிய திட்டத்தினை துவக்குதல்.**

**Introduction of a new scheme in the name of "Seerthirutha Siragugal" to reform and rehabilitate all type of prisoners.**

அனைத்து வகையான சிறைவாசிகளையும் நல்வழிப்படுத்தி மறுவாழ்வு அளிக்க, "சீர்திருத்தச் சிறகுகள்" என்கிற புதியத் திட்டம் ரூ.100 இலட்சம் செலவினத்தில் துவக்கப்படும்.

**9. சிறைவாசிகள் ஈட்டும் ஊதியத்திலிருந்து (Prisoner's wages), அவர்கள் கணக்கிற்குப் பங்கீடு செய்யப்படும் தொகையின் விகிதத்தை உயர்த்தி வழங்குதல்.**

**Increasing the percentage of apportionment made from the wages earned by the prisoners from 50% to 80% for crediting in to their Account.**

சிறைவாசிகள் ஈட்டும் ஊதியத்திலிருந்து (Prisoner's wages), அவர்கள் கணக்கிற்குப் பங்கீடு செய்யப்படும் தொகையின் விகிதத்தை, 50 விழுக்காட்டிலிருந்து 80 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும்.



**10. சிறைவாசிகளின் தேநீர் விடுதியில், வாரம் ஒன்றுக்கு சிறைவாசிகள் செலவு செய்யும் தொகையின் உச்சவரம்பினை உயர்த்தி வழங்குதல்.**

**Enhancement of weekly ceiling of expenditure from the Prisoners Cash Property amount allowed to the prisoners.**

சிறைவாசிகளின் தேநீர் விடுதியில், வாரம் ஒன்றுக்கு சிறைவாசிகள் செலவு செய்யும் தொகையின் உச்சவரம்பினை, 'அ' மற்றும் 'ஆ' வகுப்பு சிறைவாசிகளுக்கு முறையே ரூ. 750/- லிருந்து ரூ. 1000/- ஆகவும், மற்றும் ரூ. 450/- லிருந்து ரூ.750/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

எஸ். ரகுபதி
சட்டத்துறை அமைச்சர்